# விசிட்டாத்வைதம்

இராமானுஜரின் விசிட்டாத்வைதக் கோட்பாடு தொடர்பான அடிப்படையம்சங்களை மேல்வரும் வகையில் ஆராய்க

1)விசிட்டாத்வைத விளக்கம்

2)ஏற்றுக்கொள்ளும் பிராமனங்கள்

3)தத்துவத்திரயத் தொடர்புகள்

4)இறைவன் பற்றிய சிந்தனைகள்

5)ஆன்மா பற்றிய கருத்துக்கள்

6)ஆன்மவிடுதலையும் பிரபக்தி மார்க்கமும்

7)இராமானுஜர் கோட்பாட்டின் சிறப்பம்சங்கள்

8)விசிட்டாத்வைத-துவைதத் தொடர்புகள்

## விடையமைப்பு

1)விசிட்டாத்வைத விளக்கம்

விசிட்டாத்வைதம் விசிட்டம்+அத்வைதம் விசேடனங்களுக்கும் விசேடியத்திற்கும் இடையிலான தொடர்பு விசிட்டாத்வைதம் என இராமானுஜர் குறிப்பிடுகின்றார் விசேடனமாகிய இறைவனும் உண்மை விசேடனமாகிய உயிர,உலகும் உண்மை மூன்றிலும் இறைவனே மேலானவர் என நிறுவி விடுகின்றார்.

2)ஏற்றுக்கொள்ளும் பிராமணங்கள்

காட்சி, கருதல்,உரை முதலானவையும் பிரஸ்தானதிரயங்களையும், வைணவஆகமம், வைணவபுராணம், நாலாயிர திவ்யபிரபந்தம் ஆகியன.

3)தத்தவத்திரயத் தொடர்புகள்

இறைவன், ஆன்மா, உலகம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புகளை வாதங்கள் மூலம் விளக்குதல்.

அப்பிரசித்தி, மூவகைப்பேதங்கள்,சரீர,சரீரீ தொடர்பு முதலானவற்றின் மூலம் தெளிவுபடுத்துதல்

இவைமூலம் அவற்றினிடையேயுள்ள அந்தரயாமித் தொடர்பு, உள்முரண்பாடுகள்

இறைவனின் விசேடத்துவ நிலைபற்றி விளக்கம் சரீர,சரீரீ தொடர்பு மூலம் விளக்குதல்

4)இறைவன் பற்றிய சிந்தனைகள்

விஸ்ணுவை பிரமமாகக் கொண்டுபரம்பொருள் கொள்கையைக் கூறுதல்

அவரது சகுண நிலைக்கு முதன்மை கொடுத்தல். விஸ்ணுவின் அந்தர்யாமித்துவ தொடர்பு பற்றியவை.

ஆன்மாக்களுக்கு அவர் ஐந்தொழில்களை ஆற்றுதல். ஆவதாரங்களை எடுத்தல் தொடர்பானவை.

5)ஆன்மா பற்றிய கருத்தக்கள்

ஆன்மாக்கள் எண்ணிக்கையிற் பல, நித்தியமானவை, அழிவற்றவை தாம் செய்யும் வினைகளுக்கேற்ப உடலை எடுக்கின்றன.

மூவகை ஆன்மாக்கள் பற்றிய விளக்கம். ஆன்மாக்கள் அறிவை இயல்பாக உடையவை, ஆன்மாக்களின் துயருக்கும் அல்லலுக்கும் காரணம் அறிவுக் குறைவு பிறவிப்பிணி நீங்க நற்கருமங்களைச் செய்ய வேண்டும். பிறவிப்பிணி நீங்கி ஸ்ரீவைகண்டத்தையடைதல் வீடுபேறு ஆகும்.

6)ஆன்ம விடுதலையும் பிரபக்திமார்க்கமும்

ஆன்மா வைகுண்டத்தையடைந்து விஸ்ணுவின் திருவடிகளில் சேரும் நிலை முத்தியாகும். இதற்கு வழியாக நால்வகையோகங்களைக் கூறினாலும் பக்தியோகம் தன்மை பெறுதல். புக்தியோகத்தில் பிரபக்தி மார்க்கத்திற்கு முதன்மை கொடுத்தல்.

7)இராமானுஜர் விசிட்டாத்வைதத்தின் சிறப்பம்சங்கள்

தத்தவ சிந்தனைகளையம், சமயநெறி முறைகளையும் ஒன்றினைத்து விசிட்டாத்வைதக் கோட்பாடு என்னும் புதிய கோட்பாட்டை நிறுவியவர். வேதாந்த புரட்சி செய்தவர். புண்மையில் ஒருமை வாதத்தை முன்வைத்தவர்

8)விசிட்டாத்வைத-துவைதத் தொடர்புகள்

கடவுள், ஆன்மா. உலகம் என்பன பற்றி இருகோட்பாடகளும் கூறும் கருத்துக்களை ஒப்பிட்டு விளக்குதல்.

தொகுப்பு

திரு.அ.சிறிகந்தராசா

மட்/ மமே/ நாவற்காடு நாமகள்

-வித்தியாலயம்